Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வெள்ளிக்கிழமை, மே 03, 2024 | இதழ் 20

# வயநாடு தொகுதியை தொடர்ந்து 2வது இடமாக ரேபரேலி தொகுதியில் ராகுல் காந்தி போட்டி சோனியா, பிரியங்காவுடன் சென்று வேட்பு மனு தாக்கல்



சென்னை, 03 மே 2024: 2024 நாடாளுமன்ற தேர்தலில் உத்தரபிரதேச மாநில ரேபரேலி தொகுதியில் ராகுல் காந்தியும், அமேதியில் கிஷோரி லால் சர்மாவும் போட்டியிடுவதாக காங்கிரஸ் தலைமை அதிகாரபூர்வமாக இன்று அறிவித்தது.

இதனையடுத்து சோனியா, பிரியங்கா காந்தியுடன் சென்று ராகுல் காந்தி வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

நாடாளுமன்ற தேர்தல் நாடு முழுவதும் 7 கட்டங்களாக நடைபெற்று வருகிறது. முதற்கட்ட தேர்தல் கடந்த 19ம் தேதியும், 2ம் கட்ட தேர்தல் கடந்த 26ம் தேதியும் நடைபெற்று முடிந்துள்ளது.

இதையடுத்து, வரும் 7, 13, 20, 25 ஆகிய தேதிகளில் அடுத்தடுத்த கட்ட தேர்தல் நடைபெற உள்ளது. ஜூன் 1ம் தேதி கடைசி கட்டமான 7ம் கட்ட தேர்தல் நடைபெறுகிறது. தேர்தலில் பதிவாகும் வாக்குகள் ஜூன் 4ம் தேதி எண்ணப்பட்டு அன்றே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

5ம் கட்ட தேர்தல் மே 20ம் தேதி உத்தரபிரதேசத்தில் ஒரு பகுதி உட்பட 49 தொகுதிகளுக்கு நடைபெறுகிறது. இங்கு வேட்புமனு தாக்கல் இன்று மாலையுடன் முடிவடைகிறது. உத்தரபிரதேசத்தில் சமாஜ்வாதி கட்சியுடன் தொகுதிப் பங்கீடு ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக 17 நாடாளுமன்ற தொகுதிகளில் காங்கிரஸ் போட்டியிடும் என்றும் அமேதி மற்றும் ரேபரேலியைத் தவிர அனைத்து தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை காங்கிரஸ் அறிவித்தது.

இதனிடையே அமேதி தொகுதியில் ராகுல் காந்தியும், ரேபரேலியில் பிரியங்கா காந்தியும் களமிறங்குவார்கள் என்று கூறப்பட்டு வந்தது. உள்ளூர் காங்கிரசாரும் இதனையே விரும்பினர்.

அமேதி, ரேபரேலி தொகுதிகளுக்கு வேட்புமனு தாக்கல் இன்றுடன் முடிவடையும் நிலையில், இரு தொகுதிகளுக்கும் நேற்று நள்ளிரவு வரை வேட்பாளர்களை அறிவிக்காமல் காங்கிரஸ் அமைதி காத்து வந்தது.

இந்த நிலையில் ரேபரேலி தொகுதியில் ராகுல் காந்தி போட்டியிடுவார் என்று இன்று காங்கிரஸ் அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. பிரியங்கா காந்தி போட்டியிடவில்லை.

இது குறித்து காங்கிரஸ் கட்சியின் எக்ஸ் சமூக வலைதள பக்கத்தில் கூறியிருப்பதாவது:

“மத்திய தேர்தல் குழு கூட்டத்தில், 2024 நாடாளுமன்ற தேர்தலில் ராகுல் காந்தி, உத்தர பிரதேசத்தின் ரேபரேலி தொகுதி வேட்பாளராகவும், அமேதி தொகுதிக்கு கிஷோரி லால் சர்மா வேட்பாளராகவும் அறிவிக்கப்படுகின்றனர்” என்று கூறப்பட்டுள்ளது. வேட்புமனு தாக்கலுக்கு இன்றே கடைசி நாள் என்பதால், இருவரும் இன்று வேட்புமனு தாக்கல் செய்தனர்.

ராகுல்காந்தி ஏற்கனவே வயநாடு தொகுதியில் போட்டியிட்டுள்ள நிலையில் அவர் 2வது தொகுதியாக ரேபரேலியிலும் களமிறங்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கிரஸ் கட்சியைக் குடும்பக் கட்சி என்று பிரதமர் மோடி தொடர்ந்து குற்றம்சாட்டி வருவதால், ஒரே குடும்பத்தில் 3 பேர் (சோனியா, ராகுல், பிரியங்கா) நாடாளுமன்ற உறுப்பினராக தேவையில்லை என்று ராகுல் காந்தி கருதுவதாகவும், அதனால் ரேபரேலி தொகுதியில் பிரியங்கா போட்டியிடுவதை விரும்பவில்லை எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் வயநாடு தொகுதியில் ராகுல் காந்தி

போட்டியிட்டு வெற்றி பெற்று எம்.பி. ஆனார். தற்போது அதே தொகுதியில் மீண்டும் போட்டியிடுகிறார். இந்த தொகுதியில் ஓட்டுப்பதிவு கடந்த 26 ந்தேதி நடந்தது. இந்த தொகுதியில் இடதுசாரி சார்பில் ஆனி ராஜா, பா.ஜ.க. சார்பில் அம்மாநில தலைவர் சுரேந்திரன் ஆகியோர் போட்டியிடுகின்றனர். இங்கு மும்முனை போட்டி நிலவுவதால் ராகுல் காந்தியின் வெற்றி சற்று இழுப்பறியாக இருக்கும் என கணிக்கப்படுகிறது. இதனால் தன்னை பாதுகாத்திடவே ஏற்கனவே சோனியா போட்டியிட்ட ரேபரேலியில் ராகுல் போட்டியிடுகிறார்.

ரேபரேலி தொகுதியில் பேரணியாக சென்று ராகுல் காந்தி இன்று வேட்புமனுவை தாக்கல் செய்தார். அப்போது சோனியா, பிரியங்கா, ராபர்ட்வாத்ரா ஆகியோர் உடனிருந்தனர்.

அமேதி, ரேபரேலி தொகுதிகள் காங்கிரஸ் கட்சியின் பாரம்பரிய தொகுதிகளாக உள்ளன. இங்கு நேரு காந்தி குடும்பத்தினர் தொடர்ந்து போட்டியிட்டு வருகின்றனர்.

அமேதியில் கடந்த 1967 முதல் காங்கிரஸ் வெற்றி பெற்று வருகிறது. 1980ல் சஞ்சய் காந்தி மூலமாக அமேதி காங்கிரஸ் தலைமையின் குடும்பத் தொகுதியாக மாறியது. அதே வருடம் சஞ்சய் காந்திக்கு பின் அங்கு வந்த இடைத்தேர்தலில் ராஜீவ் காந்தி முதன்முறையாகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

முன்னாள் பிரதமருமான ராஜீவ் காந்தி தொடர்ந்து 1984, 1989, 1991 வரை எம்.பி.யாக இருந்தார். அவரது மறைவால் வந்த இடைத்தேர்தலில் காந்தி குடும்பத்திற்கு நெருக்கமான கேப்டன் சதீஷ் சர்மா போட்டியிட்டு வெற்றி அடைந்தார். இதற்கு அடுத்து வந்த 1996 பொதுத் தேர்தலிலும் சர்மா, அமேதி எம்.பி.யானார். பிறகு 1998ல் பாஜகவின் சஞ்சய் சிங் கைக்கு அமேதி மாறியது.

அமேதி களத்தில் 1999ல் அப்போதைய காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி போட்டியால், மீண்டும் அது காங்கிரஸ் வசமானது. இவர் அடுத்த தேர்தலில் அருகிலுள்ள ரேபரேலிக்கு மாறிவிட அமேதியில் ராகுல் 2004ல் முதன்முறையாக களம் இறங்கினார். அடுத்து வந்த 2009, 2014, 2019 நாடாளுமன்ற தேர்தலிலும் அமேதியில் 3 முறை தொடர்ந்தார் ராகுல் காந்தி. இதில் மத்திய அமைச்சரான ஸ்மிருதி இரானி 2019ல் ராகுலை தோற்கடித்தார். அப்போது வயநாடு தொகுதியிலும் ராகுல் போட்டியிட்டதால் அங்கு வெற்றி பெற்றதை அடுத்து அவர் எம்.பி. ஆனார். சோனியா காந்தி, ரேபரேலியில் தொடர்ந்து 5 முறை வெற்றி பெற்றுள்ளார். இம்முறை அவர் ராஜஸ்தானில் இருந்து மாநிலங்களவை எம்.பி.யாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சோனியா காந்திக்கு முன், இந்திராகாந்தி ரேபரேலியில் 3 முறை வெற்றி பெற்றிருந்தார். இதே தொகுதியில் இந்திராவின் கணவரும் காங்கிரஸ் தலைவருமான பெரோஸ் காந்தி 1952 மற்றும் 1957ம் ஆண்டுகளில் 2 முறை போட்டியிட்டு வெற்றி பெற்றுள்ளார்.

அமேதி தொகுதியில் போட்டியிடும் கே.எல்.சர்மா, சோனியா குடும்பத்துக்கு மிக மிக நெருக்கமானவர். பஞ்சாப் மாநிலம் லூதியானாவை சேர்ந்த இவர் காங்கிரஸ் பாரம்பரிய குடும்பத்தில் பிறந்தவர். காங்கிரசில் சேர்ந்து அந்த கட்சிக்காக சேவையாற்றி வந்த அவர் 1983-ம் ஆண்டு ரேபரேலி தொகுதிக்கு வந்து தொகுதி பொறுப்பாளராக பதவி ஏற்றார். அன்று முதல் ராஜீவ்காந்தி, சோனியா காந்தியின் தனிப்பட்ட அன்பை சம்பாதித்தார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

# இந்தியாமார்ட் இன்டெர்மெஷ் லிட். முழு ஆண்டு மற்றும் நான்காம் காலாண்டு, மார்ச் 31, 2024 வரை - முடிவுகள் செய்திக் குறிப்பு

சென்னை, 03 மே 2024: இந்தியாமார்ட் இன்டெர்மெஷ் லிட். ("இந்தியாமார்ட்" அல்லது "கம்பெனி" என குறிக்கப்படும்) முழு ஆண்டு மற்றும் நான்காம் காலாண்டு, மார்ச் 31, 2024 வரையிலான நிதி முடிவுகளை இன்று வெளியிட்டுள்ளது.



இந்தியாமார்ட் ரூ.315 கோடி செயல்பாட்டு வருவாய் வெளியிட்டுள்ளது. இது, கடந்த காலாண்டு வருவாயான ரூ.269 கோடியுடன் ஒப்பிடுகையில் 17% வளர்ச்சியைக் குறிக்கும். இதில், இந்தியாமார்ட் இன் தனி வருவாயான ரூ.299 கோடியும் பிசி இன்ஃபோடெக் இன் வருவாயான ரூ.14 கோடியும் அடங்கும். இது முறையே 17% மற்றும் 24% நடப்பாண்டு வளர்ச்சியைக் குறிக்கும்.

நடப்பு காலாண்டில் வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட தொகை 16% வளர்ச்சி பெற்று ரூ.484 கோடியை எட்டியது. இதில், தனி வருவாயான ரூ.465 கோடியும், பிசி இன்ஃபோடெக் இன் வருவாயான ரூ.18 கோடியும் அடங்கும். இவை முறையே 16% மற்றும் 24% வளர்ச்சியைக் குறிக்கும்.

மார்ச் 31, 2024 வரையிலான ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ரூ.1,440 கோடியாக வளர்ச்சியுற்றது. இது, ஓராண்டின் மீதான 24% வளர்ச்சியைக் குறிக்கும். இதில், முக்கியமாக, இந்தியாமார்ட் இன் தனி ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ரூ.1,395 கோடி மற்றும் பிசி இன்ஃபோடெக் இன் ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ரூ.43 கோடி ஆகியவை அடங்கும் இது, முறையே ஓராண்டின் மீதான 23% மற்றும் 59% வளர்ச்சியைக் குறிக்கும்.

காலாண்டுக்கான நிகர லாபம் ரூ100 கோடியாகும். இது, 25% லாபத்தைக் குறிக்கும். காலாண்டுக்கான செயல்பாட்டு பணப்புழக்கம் ரூ.260 கோடியாகும். மார்ச் 31,2024 இல், ரொக்க மற்றும் முதலீட்டு இருப்பு ரூ.2,340 கோடியாக இருந்தது.

தனியான செயல்பாட்டு வருவாய் ரூ.299 கோடியாக வளர்ச்சியுற்றது. கடந்த ஆண்டில் இது ரூ.256 கோடியாக இருந்தது. இது 17% வளர்ச்சியைக் குறிக்கும். வளர்ச்சிக்கு முக்கியக் காரணம், செலுத்தும் சப்ளயர்கள் மூலமான 10% வளர்ச்சியும் 6% செலுத்தும் சப்ளையர்களின் எண்ணிக்கை வளர்ச்சியுமாகும்.

காலாண்டில், வாடிக்கையாளரிடமிருந்து பெறப்பட்ட தொகை ரூ.465 கோடியாகவும் மார்ச் 31, 2024 வரையிலான ஒத்திவைக்கப்பட்ட வருவாய் ரூ.1,395 கோடியாகவும் வளர்ச்சியுற்றன. இது, ஓராண்டின் மீதான 23% வளர்ச்சியைக் குறிக்கும்.

காலாண்டில், இபிஐடிடிஏ ரூ.90 கோடியாக இருந்தது. இபிஐடிடிஏ யின் லாப அளவு 30% காலாண்டின் நிகரலாபம் ரூ.92 கோடியாகும். இதன் லாப அளவு 27%.

நிதியாண்டு 2024 இன் நான்காம் காலாண்டில் இந்தியாமார்ட் 24 மில்லியன் தனித்துவமான தொழில் விசாரிப்புக்களைப் பெற்றது. இது ஓராண்டின் மீதான 14% வளர்ச்சியைக் குறிக்கும். சப்ளையர்களின் ஸ்டோர்முனைவுகள் 7.9 மில்லியனாக, வளர்ச்சியுற்றது. இது ஓராண்டின் மீதான 5% வளர்ச்சியைக் குறிக்கும். செலுத்தும் சப்ளையர்களின் எண்ணிக்கை 214கே ஆக வளர்ச்சியுற்றது. காலாண்டில் இது, நிகர 3கே வாடிக்கையாளர் சேர்ப்பை உள்ளடக்கும்.

செயல்பாடு குறித்து தலைமை நிர்வாக அதிகாரி, திரு.தினேஷ் அகர்வால் கீழ்க்கண்டவாறு கூறினார்:

நிதியாண்டில் வருவாய், ஒத்திவைக்கப்பட்ட வருவாய், லாபம் மற்றும் பணப்புழக்கத்தில் சீரான வளர்ச்சியை அடைந்துள்ளோம். சிறப்பான பொருள் மற்றும் வாடிக்கையாளர் அனுபவம் ஆகியவற்றை அளிப்பதன் மூலம், தொழில்கள் மேலும் மேலும் ஆன்லைன் வளர்ச்சி பெறுவதை ஊக்குவிப்பதில் எங்கள் தனிக் கவனம் இருக்கும். திடமான செயல்பாட்டு பணப்புழக்கம், எமது மதிப்பூட்டலுக்கு மேலும் வலுசேர்க்க தொடர்ந்த முதலீடுகள் ஆகியவற்றின் மூலம், தொழில்களின் வளர்ந்து வரும் இணையதள பயன்பாட்டு வளர்ச்சியினூடே, தொடர்ந்த லாபகரமான வளர்ச்சியை எட்டுவோம் என நம்புகிறோம்.

# பெடரல் வங்கியின் லாபம் 24 சதவீதம் உயர்வு வரலாற்றில் இது வரை காணாத நிகர வட்டி வருமானம் மற்றும் வலுவான சொத்து தரம்

சென்னை, 03 மே 2024: பெடரல் வங்கி மார்ச் 31 ஆம் தேதி முடிவுற்ற நிதி ஆண்டின் நான்காம் காலாண்டில் பெடரல் வங்கியின் மொத்த வணிகம் 461937 கோடி ரூபாயாக உயர்ந்தது. பெடரல் வங்கியின் வரலாற்றில் இது வரை இல்லாத வளர்ச்சியாக நிகர வட்டி வருமானம் 14.97% அதிகரித்து 2195.11 கோடி ரூபாயை எட்டியது. முடிவுகள் மற்றும் நிதி செயல்திறன் குறித்து ஃபெடரல் வங்கியின் நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி திரு.ஷ்யாம் ஸ்ரீநிவாஸன் கருத்து தெரிவித்தது என்னவெனில்: "கடந்து போய நிதியாண்டு எங்களுக்கு ஒரு வலுவான வளர்ச்சியை தந்தது. 'மிகவும் பாராட்டுக்கு உரிய வங்கி' என்கிற எங்களின் இலக்கை அடைவதற்குரிய புதிய வரையறைகளை அமைத்து வெற்றிகரமாக முன்னேற வழி வகுத்தது. கிளைகளின் எண்ணிக்கையை 10% அதிகரித்தது மூலம் இந்தியாவின் மூலை முடுக்கெல்லாம் வங்கியின் உயர்தர சேவைகளை உறுதி செய்தோம். கிளைகளை அதிகரித்தது மட்டும் இல்லாமல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் டெக்னாலஜியில் கணிசமான அளவு முதலீடு செய்ததின் மூலம் இப்பொழுது இந்தியாவின் 15000-ற்கும் அதிகம் பின் கோடுகளில் வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டிருக்கிறோம்.

வரும் ஆண்டை நம்பிக்கையுடன் எதிர்நோக்குகிறோம், மேலும் எங்கள் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் முதல் தேர்வாக 'பிராண்ட் ஃபெடரல்' இருப்பதை உறுதி செய்யும் விதத்தில் பல புதிய சேவைகளை வழங்குவதில் கவனம் செலுத்துகிறோம்."

வங்கியின் மொத்த வர்த்தகம் 19.11 சதவீதம் அதிகரித்து ரூ.461937.36 கோடியாக உள்ளது. கடந்த ஆண்டின் இதே காலாண்டில் மொத்த வைப்பு நிதி ரூ.213386.04 கோடியிலிருந்து 18.35 சதவீதம் அதிகரித்து ரூ. 252534.02 கோடியாக அதிகரித்துள்ளது.

வங்கி கடன் வழங்குவதிலும் நல்ல வளர்ச்சியை எட்டியுள்ளது. முந்தைய ஆண்டில் ரூ. 174446.89 கோடியாக இருந்த மொத்தக் கடன்கள் ரூ. 209403.34 கோடியாக அதிகரித்துள்ளது.

ரீட்டைல் கடன்கள் (வீடு, வாகன, சொத்து அடமான, மற்றும் இதர) 20.07 சதவீதம் அதிகரித்து ரூ.67435.34 கோடியாக உள்ளது. வணிக கடன்கள் 26.63 சதவீதம் அதிகரித்து ரூ. 21486.65 கோடியாகவும், கார்ப்பரேட் கடன்கள் 11.97 சதவீதம் அதிகரித்து ரூ. 73596.09 கோடியாகவும் உள்ளது

தங்க நகை கடன் 27.14 சதவீதம் அதிகரித்து 25000 கோடி ரூபாய் என்ற மைல்கல்லை கடந்தது.

நிகர வட்டி வருமானம் 14.97 சதவீதம் அதிகரித்து ரூ. 2195.11 கோடியாக உள்ளது. கடந்த நிதியாண்டில் இது ரூ. 1909.29 கோடியாக இருந்தது.

வங்கியின் மொத்த செயல்படாத சொத்துகள் ரூ. 4528.87 கோடிகள் ஆகும். இது மொத்த கடனில் 2.13 சதவீதமாகும். நிகர செயல்படாத சொத்துகள் ரூ. 1255.33 கோடி ஆகும். இது மொத்த கடனில் 0.60 சதவீதமாகும்.

வங்கியின் ப்ரொவிஷன் கவரேஜ் விகிதம், தள்ளுபடி செய்யப்பட்ட கணக்குகள் நீங்கலாக, 71.08 சதவீதம் ஆகும். காலாண்டில் வங்கியின் நிகர மதிப்பு ரூ. 29089.41 கோடியாக அதிகரித்துள்ளது. மூலதனப் போதுமான அளவு 16.13 சதவீதமாகி உள்ளது . வங்கிக்கு தற்போது 1500 க்கும் மேல் கிளைகளும் 2013 ஏடிஎம்/ சிடிஎம்களும் உள்ளன.

# தனிஷ்க்கின் மிஆ தமிழ்நாட்டில் தனது செயல்பாடுகளை விரிவுப்படுத்தும் வகையில் நான்கு பிரம்மாண்டமான புதிய விற்பனை நிலையங்களை தொடங்குகிறது!

சென்னை, 03 மே 2024: இந்தியாவின் நவநாகரீக மற்றும் விலையுயர்ந்த நகை ப்ராண்ட்களில் ஒன்றாக முன்னிலை வகிக்கும் மிஆ பை தனிஷ்க், இந்த அட்சய திருதியையின் மங்களகரமான தருணத்தை கொண்டாடும் வகையில் தமிழ்நாட்டின் சென்னை மற்றும் திருப்பூர் ஆகிய நகரங்களில் நான்கு தனித்துவமான புதிய விற்பனை நிலையங்களை தொடங்கி இருக்கிறது. இந்த புதிய விற்பனை நிலையங்களின் விரிவாக்கமானது, தமிழ்நாட்டில் மிஆ பை தனிஷ்க் தனது சில்லறை விற்பனையை மேலும் வலுவப்படுத்தும் செயல்பாட்டு யுக்தியாக மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



தனது புதுமைத்துவமிக்க நுட்பமான கைவினைத்திறன் மற்றும் சமகாலத்தில் புதிய பாணியை மக்களிடையே பிரபலப்படுத்தும் வடிவமைப்புகள் மூலம், மிஆ தனது வலுவான விற்பனை செயல்பாடுகளை கலாச்சார செறிவுக்காக பெயர்பெற்ற தமிழ்நாட்டில் விரிவுபடுத்த களமிறங்கி இருக்கிறது. இந்த செயல்பாட்டு விரிவாக்க முயற்சியானது மிஆ ப்ராண்டின் இளமைத்துள்ளல் மிகுந்த குணாதிசயத்தையும், தனக்கென ஒரு ஆளுமையை எல்லோருக்கும் எளிதில் கிடைக்க செய்கிற ப்ராண்டின் தனித்துவத்தையும் பிரதிபலிப்பதாக அமைந்திருக்கிறது. செயல்பாட்டு யுக்தியின் அடிப்படையில், தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் பரவலாக தொடங்கப்படுவதால், இந்த நான்கு பிரம்மாண்ட விற்பனை நிலையங்கள், மிஆ-வின் சில்லறை வர்த்தகப் பயணத்தில் குறிப்பிடத்தக்க மைல்கல்லைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமைந்திருக்கின்றன. மேலும், ஒவ்வொரு வாடிக்கையாளர்களும் எளிதில் நவநாகரீக நகைகளைப் பெறுவதை சாத்தியமாக்குவதையும், அவர்களுக்கான தனிப்பயனாக்கப்பட்ட நகை வாங்கும் அனுபவங்களை வழங்குவதையும் மிஆ பெரும் அர்ப்பணிப்போடு மேற்கொள்வதை எடுத்து காட்டும் வகையிலும் இந்த விரிவாக்கம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய விற்பனை நிலையங்கள் கீழ்கண்ட முகவரிகளில் அமைந்திருக்கின்றன:

1. மிஆ பை தனிஷ்க், 180, புரசைவாக்கம் ஹை ரோடு, கெல்லிஸ், கீழ்ப்பாக்கம், சென்னை, தமிழ்நாடு 600010
2. மிஆ எழுதிய தனிஷ்க், 'எண்: 464 (9) காந்தி நிலையம், பி.என். சாலை, திருப்பூர் - 641602 (புஷ்பா தியேட்டர் அருகில்)
3. மிஆ எழுதிய தனிஷ்க், எண்: 8, 3வது குறுக்குத் தெரு, கஸ்தூரிபா நகர், அடையாறு, சென்னை, தமிழ்நாடு 600020
4. மிஆ பை தனிஷ்க், கதவு எண்:42, பீனிக்ஸ் மார்க்கெட் சிட்டி, ஜி-23, வேளச்சேரி மெயின் ரோடு, வேளச்சேரி, சென்னை, தமிழ்நாடு 600 042

இந்த அனைத்து புதிய விற்பனை நிலையங்களையும் மிஆ பை தனிஷ்க் நிறுவனத்தின் வணிகத் தலைவர் ஷியாமளா ரமணன் மற்றும் தனிஷ்க்கின் ஜூவல்லரி பிரிவு பிராந்திய வர்த்தக மேலாளர் - தெற்கு திரு. நரசிம்மன் ஒய்.எல் ஆகிய அந்தந்த விற்பனை நிலையங்களின் வணிக கூட்டு பங்குதாரர்களுடன் இணைந்து இருவரும் தொடங்கி வைத்தனர். அட்சய திருதியையின் மங்களகரமான தருணத்தில் புதிதாக தொடங்கப்பட்டிருக்கும் விற்பனை நிலையங்களின் தொடக்கத்தைக் கொண்டாடும் வகையில், மிஆ தயாரிப்புகளுக்கு 20%* வரையிலான தொடக்க விழா தள்ளுபடியையும் அறிவித்துள்ளது. இந்தச் சலுகை மே 5-ம் தேதி வரை நான்கு புதிய விற்பனை நிலையங்களிலும் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும்.

இந்த விற்பனை நிலையங்கள் மொத்தம் 3,550 சதுர அடி பரப்பளவில் மிகப்பிரம்மாண்டமாக தொடங்கப்பட்டுள்ளன. இவற்றில் நவீன மற்றும் சமகால 14 காரட் மற்றும் 18 காரட் மதிப்பிலான பல்வேறு வடிவமைப்புகளிலான நகைகள் இடம்பெற்றுள்ளன. கண்களைக் கவரும் வண்ண கற்கள், ஜொலிக்கும் தங்கம், பளபளக்கும் வைரம் மற்றும் பிரகாசிக்கும் வெள்ளி ஆகியவற்றில் செய்யப்பட்ட மிஆ -வின் மிக நேர்த்தியான நகைகளின் தொகுப்புகள் இங்கு விற்பனைக்குள்ளன. காதணிகள், தோடுகள், விரல் மோதிரங்கள், வளையல்கள், கம்மல்கள், பதக்கங்கள், கழுத்தணிகள் மற்றும் மங்களசூத்திரங்கள் ஆகியவற்றின் பல்வேறு பிரிவுகளிலான நகைகள் பல்வேறு ரசனைகளைக் கொண்ட வாடிக்கையாளர்களின் எதிர்பார்புகளை பூர்த்தி செய்யும் வகையில் விற்பனைக்கு தயாராக உள்ளன. தனது நவநாகரீகமான மற்றும் தனித்துவமான நகைத்தொகுப்புகளுக்கு பெயர் பெற்ற ப்ராண்டாக திகழும் மிஆ பை தனிஷ்க், அதிக வேலைப்பாடுகள் இல்லாத, ஸ்டைலின் அசத்தலான வெளிப்பாட்டுடன் தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட சில குறிப்பிடத்தக்க வடிவமைப்புகளைக் கொண்டுள்ளது. மிஆ விற்பனை நிலையங்களில் பழைய தங்கத்திற்கு பதிலாக புதிய தங்க நகைகளை வாங்கும் தங்கப் பரிமாற்றத் திட்டத்தை அனைவருக்கும் எளிதாக்கும் வகையில் காரட் மீட்டர் பொருத்தப்பட்டுள்ளன. மேலும் வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட நகை வாங்கும் அனுபவத்தை வழங்குவதற்காக மிஆ-வின் பணியாளர்கள் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விற்பனை நிலையங்களில் சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் மற்றும் பிரபஞ்சத்தின் மீதான ஈர்ப்பின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட 14 காரட் தங்கத்தில் நகைகள் 200-க்கும் மேற்பட்ட வடிமைப்புகளுடன் தனிஷ்க் பை மியா-வின் 'ஸ்டார்பர்ஸ்ட்' நகைத்தொகுப்பு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், உங்களது வாழ்க்கையின் சிறப்பான தருணங்களைக் கொண்டாடுவதற்கு ஏற்ற நகைகளில் தனித்துவமான மற்றும் அர்த்தமுள்ள விருப்பத்தேர்வுகளை வழங்கும் சாலிடேர் நகைகளையும் இங்கு விற்பனை செய்யப்படுகிறது. அதன் சமீபத்திய அவ்ரம் நகைத்தொகுப்பு 18 காரட் மதிப்புள்ள சர்வதேச மற்றும் நவீன தங்க நகைகளின் ஏராளமான வடிவமப்புகளையும் வழங்குகிறது. அட்சய திருதியையை முன்னிட்டு, வார்லி கலையின் அழகியல் கலந்த வசீகரம், களிமண் பானைகளின் பழமையான அழகியல், பழங்குடியினரின் உருவ கருத்தாக்கங்களின் மிக நுணுக்கமான அழகு, பச்சை வண்ண மாங்காயின் புத்துணர்ச்சியூட்டும் உணர்வு, மண்டல ஓவியங்களின் கோட்டுருவாக்கங்கள் என இவற்றையெல்லாம் அடிப்படையாக கொண்டு நவீன பெண்களுக்காக 22 காரட் தங்கத்தில் வடிவமைக்கப்பட்ட, 'நேட்டிவ்' நகைத்தொகுப்பையும் இந்த பிராண்ட் அறிமுகப்படுத்தியுள்ளது. பாராம்பரியத்தையும், சமகால போக்குகளிலான பாணிகளையும் மிகச்சரியாக ஒருங்கிணைத்து வடிவமைக்கப்பட்ட நகைத்தொகுப்பாகவும் இது அமைந்திருக்கிறது.

தொடக்க விழாவில் பேசிய மிஆ பை தனிஷ்க் நிறுவனத்தின் வணிகத் தலைவர் ஷியாமளா ரமணன் மற்றும் தனிஷ்க்கின் ஜூவல்லரி பிரிவு பிராந்திய வர்த்தக மேலாளர் - தெற்கு திரு. நரசிம்மன் ஒய்.எல் ஆகிய இருவரும், ''கடந்த ஆண்டு, தமிழ்நாட்டில் மட்டும் 12 புதிய மிஆ பை தனிஷ்க்கின் பிரத்தியேக விற்பனை நிலையங்களை அறிமுகப்படுத்தி இருக்கிறோம். இதற்கு வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்திருக்கும் அமோகமான வரவேற்பு எங்களை மிகவும் மகிழ்ச்சியடைய வைத்திருக்கிறது. இங்குள்ள நவீனயுக யுவதிகளின் பேரன்பினால் உற்சாகமடைந்த நாங்கள் நேற்று முதல் இன்று வரை சென்னை(3), திருப்பூர்(1) ஆகிய நகரங்களில் 4 புதிய விற்பனை நிலையங்களை திறக்க இருக்கிறோம். எங்களது விற்பனை நிலையங்கள் அனைவருக்கும் ஏற்ற, தங்களுக்கு பிடித்த நகைகளைத் தேர்ந்தெடுக்க உதவும் வகையில், இளஞ்சிவப்பு மற்றும் தங்கம் ஆகியவற்றின் இதமான அரவணைப்புடன் கூடிய 2000-க்கும் மேற்பட்ட வடிவமைப்புகளைக் கொண்ட புதையல் பெட்டியைப் போல் உங்களுக்காக காத்திருக்கிறது''

''இன்றைய பெண்களின் தேவையையும், எதிர்பார்புகளையும் அவர்களின் ஆளுமையின் நீட்சியாக இருக்கும் நகைகளை அவர்கள் எப்படி பார்க்கிறார்கள் என்பதையும் மிஆ மிக நன்றாகவே புரிந்துகொண்டிருக்கிறது. எங்கள் தயாரிப்புகள் அதிக எடையில்லாத, அணிவதற்கு மென்மையான நகைகளாக இருப்பதோடு நவநாகரீகமான, நவீனத்துவமிக்க வடிவமைப்புகளுடன் அவர்களின் விருப்பங்களை மனதில் கொண்டு வடிவமைக்கப்பட்டு உள்ளன. ஒவ்வொரு நகையும் அதைப் பார்ப்பவர்களை மீண்டும் ஒரு முறையாவது திரும்பி பார்க்க வைக்கும் அளவுக்கு தனித்துவமானதாக இருப்பதோடு, வெவ்வேறு ஆடைகளுடன் அணியக்கூடிய அளவுக்கு பல்வகை அழகியலுடன் இருக்கின்றன. இந்த அட்சய திருதியை உங்களுக்கு அபரிமிதமான மகிழ்ச்சி, பெரும் வளம் மற்றும் செழிப்பை வழங்கவேண்டும் என பெரும் உற்சாகத்துடன் உங்களை வாழ்த்துவதோடு, எங்களின் புதிய மற்றும் அனைத்து விற்பனை நிலையங்களுக்கும் நீங்கள் வருகை தந்து உங்களுக்கு மிகவும் பிடித்த நகையை வாங்கி வாழ்க்கையின் செழிப்பை கொண்டாட அழைக்கிறோம்!" என்றார்கள்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# புதிய மாடல் டொயோட்டா ரூமியன் கார்: டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார்ஸ் அறிமுகம்



புதுச்சேரி, 03 மே 2024: டொயோட்டா ரூமியன் காரின் புதிய மாடல் மற்றும் இ-சிஎன்ஜி காருக்கான முன்பதிவு மற்றும் அதற்கான விலை ஆகியவற்றை டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம் அறிவித்துள்ளது.

புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள ரூமியன் ஜி-ஏடி போதிய இட வசதியுடன், சிறந்த எரிபொருள் திறன், ஸ்டைலான மற்றும் பிரீமியம் வெளிப்புற வடிவமைப்பு ஆகியவற்றுடன் வெளிவந்துள்ளது.

இந்த காருக்கான எக்ஸ்-ஷோரூம் விலை ரூ.13 லட்சம் ஆகும். இதன் டெலிவரி வரும் 5-ந்தேதி முதல் துவங்க இருப்பதாக இந்நிறுவனம் அறிவித்துள்ளது. மேலும் வாடிக்கையாளர்கள் 11 ஆயிரம் ரூபாயை அங்கீகரிக்கப்பட்ட டீலர்கள் அல்லது ஆன்லைனில் செலுத்தி இந்த காரை முன் பதிவு செய்து கொள்ளலாம் என்றும் டொயோட்டா கூறியுள்ளது.

டொயோட்டா ரூமியன் ஜி-ஏடி மாடல் கார் 1.5 லிட்டர் கே சீரிஸ் பெட்ரோல் என்ஜினுடன் 6-ஸ்பீடு ஆட்டோமேட்டிக் டிரான்ஸ்மிஷன் மூலம் இயக்கப்படுகிறது, இதில் நியோ டிரைவ் (ஐஎஸ்ஜி) தொழில்நுட்பம் இந்த காருக்கான சிறந்த செயல்திறனுக்கு உறுதி அளிக்கிறது. இதன் பெட்ரோல் மாடலைப் பொறுத்தவரை 75.8 கிலோவாட்ஸ் @6000 ஆர்பிஎம் ஆற்றல் மற்றும் 136.8 என்எம் @4400 ஆர்பிஎம் முறுக்குவிசையை கொண்டுள்ளது. இதேபோல் சிஎன்ஜி மாடலைப் பொறுத்தவரை 64.6 கிலோவாட்ஸ் @5500 ஆர்பிஎம் மற்றும் 121.5 என்எம் @4200 ஆர்பிஎம் முறுக்குவிசையைக் கொண்டுள்ளது. டொயோட்டா ரூமியன் நியோ டிரைவ் மேனுவல் கியர் எஸ், ஜி மற்றும் வி என 7 வித மாடல்களில் கிடைக்கிறது. நியோ டிரைவ் ஆட்டோமேட்டிக் கியரைப் பொறுத்தவரை எஸ், ஜி மற்றும் வி ஆகிய மாடல்களில் கிடைக்கிறது. இ-சிஎன்ஜியைப் பொறுத்தவரை எஸ் மாடலில் கிடைக்கிறது.

மேலும் இதன் உட்புறத்தில் வயர்லெஸ் ஆண்ட்ராய்டு ஆட்டோ மற்றும் ஆப்பிள் கார்பிளே உடன் 17.78 செ.மீ. ஸ்டமார்ட்பிளே டச் ஸ்கிரீன் ஆடியோ சிஸ்டம் உட்பட மேம்பட்ட தொழில்நுட்பத்தைக் கொண்டுள்ளது. டொயோட்டா ஐ-கனெக்ட் தொழில்நுட்பத்துடன் பல்வேறு சிறப்பு அம்சங்களையும் கொண்டுள்ளது. இந்த காரில் உரிமையாளர்களின் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் விதமாக முன்புறத்தில் இரட்டை ஏர்பேக்குகள், எலக்ட்ரானிக் பிரேக்போர்ஸ் டிஸ்ரிபியூஷன் உடன் கூடிய பிரேக்கிங் சிஸ்டம், ஹில் ஹோல்ட், எலக்ட்ரானிக் ஸ்டெபிலிட்டி புரோகிராம் உள்ளிட்ட மேம்பட்ட தொழில்நுட்பங்களும் உள்ளது.

இந்த புதிய அறிமுகம் குறித்து டொயோட்டா நிறுவனத்தின் விற்பனை மற்றும் மார்க்கெட்டிங் பிரிவு துணைத் தலைவர் சபரி மனோகர் கூறுகையில், டொயோட்டா ரூமியனின் புதிய மாடல்களை அறிவிப்பது குறித்து நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம், இதன் மூலம் வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு ஏற்ப அவர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்யும் வகையில் இந்த மாடல் கார்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ரூமியன் ஜி-ஏடி மாடல் காருக்கான முன்பதிவு துவங்கி உள்ளது. கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் அறிமுகம் செய்யப்பட்ட எங்களின் ரூமியன் கார் வாடிக்கையாளர்கள் இடையே மிகுந்த வரவேற்பை பெற்ற காராக விளங்கி வருகிறது. அதேபோல் இந்த புதிய மாடல் கார்களும் மிகுந்த வரவேற்பை பெறும் என்று நம்புகிறோம். மேலும் வாடிக்கையாளர்கள் எங்கள் மீது வைத்துள்ள நம்பிக்கைக்கும் அன்பிற்கும் எங்களின் மனமார்ந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறோம் என்றார்.

மேலும் அவர் பேசுகையில், எங்களைப் பொறுத்தவரை வாடிக்கையாளர்களின் குறிப்பறிந்து அவர்கள் விரும்பும் வகையில் புதிய கார்களை சீரான இடைவெளியில் அறிமுகம் செய்து வருகிறோம். அவர்களுக்கு எப்போதும் சிறந்த கார்களை வழங்க வேண்டும் என்பதில் அதிக கவனம் செலுத்துவதன் மூலம், வளர்ந்து வரும் வாடிக்கையாளர் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். ஒப்பிடமுடியாத இட வசதி, மேம்பட்ட சிறப்பு அம்சங்கள் மற்றும் சிறந்த செயல்திறன், டொயோட்டாவின் விற்பனைக்குப் பிந்தைய சேவை ஆகியவற்றின் காரணமாக, எங்களின் ரூமியன் கார், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய சிறந்த காரை தேடும் குடும்பங்களுக்கான விருப்பமான தேர்வாக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

டொயோட்டாவின் சிறப்புமிக்க முன்புற கிரில், குரோம் பூச்சு கொண்ட முன்பக்க பம்பர், பின்புற கதவு குரோம் அலங்காரத்துடன் கூடிய எல்இடி பின்புற விளக்குகள் மற்றும் ஸ்டைல் மற்றும் அதிநவீனத்தை வெளிப்படுத்தும் இரட்டை வண்ண அலாய் சக்கரங்களுடன் ஸ்டைலான மற்றும் பிரீமியம் வெளிப்புற வடிவமைப்பை இந்த ரூமியன் கார் கொண்டுள்ளது. அதேபோல் இதன் உட்புறத்தைப் பொறுத்தவரை மிகவும் ஆடம்பரமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மரத்தாலான பினிஷ் டேஷ்போர்டு மற்றும் கதவு டிரிம்களுடன் கூடிய பிரீமியம் டூயல்-டோன் உட்புறங்கள் என பல்வேறு வசதிகளைக் கொண்டுள்ளது.

இந்த கார் மிக உயரிய பாதுகாப்பு அம்சத்தைக் கொண்டுள்ளது. இதன் முன்புறத்தில் இரட்டை ஏர்பேக்குகள், எலக்ட்ரானிக் பிரேக்போர்ஸ் டிஸ்ரிபியூஷன் உடன் கூடிய பிரேக்கிங் சிஸ்டம், ஹில் ஹோல்ட், எலக்ட்ரானிக் ஸ்டெபிலிட்டி புரோகிராம் உள்ளிட்ட மேம்பட்ட தொழில்நுட்பங்களும் இந்த காரில் உள்ளது. மேலும் அனைத்து இருக்கைகளுக்குமான சீட் பெல்ட் நினைவூட்டல் மற்றும் அதிகவேக எச்சரிக்கை அமைப்பு ஆகியவையும் இடம் பெற்றுள்ளது.

டோயோட்டா கார்களை வாங்க விரும்பும் வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு தனிப்பயனாக்கப்பட்ட நிதித் திட்டங்கள் மற்றும் ஒப்பிடமுடியாத சலுகைகளையும் வழங்குகிறது. இந்த சலுகைகளில் நீட்டிக்கப்பட்ட உத்தரவாதம் உள்ளிட்ட பல்வேறு சலுகைகளும் வழங்கப்படுகிறது. அதேபோல் 8 ஆண்டு வரையிலான நிதித் திட்டங்கள், கூடிய குறைந்த வட்டியில் இஎம்ஐ வசதி டொயோட்டா ஸ்மார்ட் பைனான்ஸ் நிதி திட்டத்தில் கிடைக்கும்.

டொயோட்டாவின் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட 5 ஆண்டு இலவச சாலையோர உதவி, 3 ஆண்டுகள் அல்லது 1,00,000 கிமீ நிலையான உத்தரவாதம் ஆகியவையும் வழங்கப்படுகிறது. மேலும் குறைந்த கட்டணத்தில் இது 5 ஆண்டுகள் அல்லது 2,20,000 கிமீ வரை நீட்டித்து வழங்கப்படுகிறது.

# மீண்டும் வந்துள்ளது சாம்சங்கின் 'பேப் கிராப் பெஸ்ட்'! சாம்சங்.காம் மற்றும் சாம்சங் பிரத்தியேக ஸ்டோர்களில் ஸ்மார்ட்போன்கள், டிவிகள், மடிக்கணினிகள் மற்றும் டிஜிட்டல் சாதனங்கள் ஆகியவற்றில் தோற்கடிக்க முடியாத சலுகைகள்!

கோயம்புத்தூர், 03 மே 2024: இந்தியாவின் மிகப்பெரிய வாடிக்கையாளர் எலக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங், அதன் மிகப்பெரிய கோடைகால விற்பனையான 'பேப் கிராப் பெஸ்ட்'-ஐ அறிவித்துள்ளது, இது சாம்சங்.காம், சாம்சங் ஷாப் செயலி ஆகியவற்றுடன் சாம்சங் பிரத்தியேக கடைகளிலும் பல்வேறு வகையான தயாரிப்புகளில் அசாதாரணமான சலுகைகள் மற்றும் அற்புதமான கேஷ்பேக்குகளை வழங்குகிறது. 'பேப் கிராப் பெஸ்ட்'-இன் போது, கேலக்ஸி எஸ் வரிசை, கேலக்ஸி இசட் வரிசை மற்றும் கேலக்ஸி எ வரிசை ஸ்மார்ட்போன்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாடல்களில் வாடிக்கையாளர்கள் 64% வரை தள்ளுபடியைப் பெறலாம். கேலக்ஸி டேப்லெட்டுகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாடல்கள், உபரி பாகங்கள் மற்றும் அணியக்கூடிய பொருட்கள் 77% வரை தள்ளுபடியில் கிடைக்கும். கேலக்ஸி புக்4 வரிசை மடிக்கணினிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாடல்களை வாங்கினால், வாடிக்கையாளர்கள் 24% வரை தள்ளுபடியைப் பெறலாம்.




தயாரிப்புகளில் முதன்மையானதான நியோ-கியூ எல் ஈ டி 8கே, நியோ கியூ எல் ஈ டி, ஓ எல் ஈ டி, ப்ரேம் டிவிகள் மற்றும் கிறிஸ்டல் ஹிபிஞ்ரி வரிசை போன்ற சாம்சங் டிவிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாடல்கள் 43% வரை தள்ளுபடியில் கிடைக்கும். நியோ கியூ எல் ஈ டி 8கே, நியோ கியூ எல் ஈ டி மற்றும் ஓ எல் ஈ டி டிவிகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாடல்களை வாங்கும் வாடிக்கையாளர்கள் ரூ.20000 வரை வங்கி கேஷ்பேக்கைப் பெறலாம். கூடுதலாக, வாடிக்கையாளர்கள் அனைத்து டிவிகளையும் வாங்கும்போது பரிமாற்ற ஊக்கத்தொகையாக ரூ.5000 வரையிலான மதிப்புள்ள பலன்களைப் பெறலாம்.

'பேப் கிராப் பெஸ்ட்' 2024 ஆனது, குளிர்சாதனப் பெட்டிகள், வாஷிங் மெஷின்கள், மைக்ரோவேவ்கள், மானிட்டர்கள் மற்றும் ஏர் கண்டிஷனர்கள் போன்ற பல டிஜிட்டல் உபகரணங்களுக்கு தள்ளுபடிகள் மற்றும் ஒப்பிடமுடியாத விலைகளை வழங்குகிறது.

எங்களது 'மேலும் வாங்குங்கள் மேலும் சேமியுங்கள்' தளத்தின் மூலம், சாம்சங்.காம் அல்லது சாம்சங் ஷாப் செயலி மூலம் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தயாரிப்புகளை வாங்கும்போது வாடிக்கையாளர்கள் கூடுதலாக 5% சேமிக்க முடியும். 'மேலும் வாங்குங்கள் மேலும் சேமியுங்கள்' தளமானது, நிறைய சாம்சங் தயாரிப்புகளில் தொகுப்பான சலுகைகளை நுகர்வோர்கள் அனுபவிக்க அனுமதிக்கிறது.

இந்த உற்சாகம் இத்துடன் முடிவடையவில்லை, பக்கவாட்டு குளிர்சாதனப்பெட்டிகள், நேர்த்தியான பிரெஞ்ச் கதவுடன் கூடிய குளிர்சாதனப்பெட்டிகள் மற்றும் பல்துறைத் திறமைவாய்ந்த ஃப்ரோஸ்ட் ஃப்ரீ குளிர்சாதனப்பெட்டிகள் போன்ற பலதரப்பட்ட மதிப்புமிக்க உபகரணங்களில் வாடிக்கையாளர்கள் 48% வரை தள்ளுபடி பெறலாம். அவர்கள் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட தயாரிப்புகளை வாங்குவதன் மூலம் பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட செயற்கை நுண்ணறிவு (ஏ ஐ) தொகுப்பு மூலம் தங்கள் சமையலறை அனுபவத்தை மேம்படுத்தலாம் மற்றும் கூடுதலாக 10% தள்ளுபடியை அனுபவிக்கலாம். வாஷிங் மெஷின்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாடல்கள் 50% வரை தள்ளுபடியில் கிடைக்கும். கூடுதலாக, முழு தானியங்கி ப்ரண்ட் லோடிங் மற்றும் முழு தானியங்கி டாப் லோடிங் மெஷின்களுக்கு டிஜிட்டல் இன்வெர்ட்டர் மோட்டார் மீது தாராளமாக 20 ஆண்டு கால உத்தரவாதத்தை வாடிக்கையாளர்கள் பெறுவார்கள். எளிதாக கிடைக்கச் செய்வதற்காக, ஏற்கத்தக்க ஈஎம்ஐ விருப்பமானது, முழு தானியங்கி ப்ரண்ட் லோடிங்கிற்கு வெறும் ரூ. 1490, முழு தானியங்கி டாப் லோடிங்கிற்கு ரூ. 990 மற்றும் அரை தானியங்கி வாஷிங் மெஷின்களுக்கு ரூ. 756 முதல் கிடைக்கிறது.

"சாம்சங்.காம் மற்றும் சாம்சங் பிரத்தியேக ஸ்டோர்களில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கோடைகால விற்பனையை மீண்டும் கொண்டு வருவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இந்த பேப் கிராப் பெஸ்ட் மூலம், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த பேரங்கள் மற்றும் சலுகைகளை வழங்க விரும்புகிறோம். 'மேலும் வாங்குங்கள் மேலும் சேமியுங்கள்' தளத்திற்கு வாடிக்கையாளர் மத்தியில் ஊக்கமளிக்கும் வகையிலான ஏற்கும் தன்மையை நாங்கள் காண்கிறோம், எனவே, இந்த ஃபேப் கிராப் ஃபெஸ்டில், முழு சாம்சங் தயாரிப்பு வரம்பிலும் தொகுப்புகளை உருவாக்குவது மட்டுமின்றி, தொகுப்பில் கூடுதல் 5% தள்ளுபடியையும் அனுபவிக்கும் விதத்தில் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு நெகிழ்வுத்தன்மையை அளிப்போம். வாடிக்கையாளரின் மகிழ்ச்சியை அதிகரிக்கும் வகையில், தேர்ந்தெடுக்கப்பட்ட மாடல்களில் ஒரே நாளில் டெலிவரியும் நாங்கள் வழங்குவோம்," என்று சாம்சங் இந்தியாவின் டி2சி வர்த்தக துணைத் தலைவர் சுமித் வாலியா கூறினார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மானிட்டர் மாடல்கள் 61% வரை தள்ளுபடியில் கிடைக்கும். கூடுதலாக, ஸ்மார்ட் மற்றும் கேமிங் மானிட்டர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட மாடல்களை வாங்கும் போது வாடிக்கையாளர்கள் ஒரு வால் மவுண்ட்டையும் பரிசாகப் பெறுவார்கள். சாம்சங் மேலும் 3 ஆண்டு உத்தரவாதம் மற்றும் அனைத்து மானிட்டர்களிலும் 20% வரை வங்கி கேஷ்பேக்கையும் (ரூ. 10000 வரை) வழங்கும்.

# சிக்கன் ரைஸில் விஷம் கலந்து தாத்தாவை கொலை செய்த பேரன் கைது. தாய்க்கு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை

சென்னை, 03 மே 2024: சிக்கன் ரைஸில் விஷம் கலந்து தாத்தாவை கொலை செய்த பேரன் கைது செய்யப்பட்டான்.

நாமக்கல் பஸ் நிலையம் எதிரில் ஜீவானந்தம் (வயது 32) என்பவர் ஓட்டல் நடத்தி வருகிறார். இந்த ஓட்டலில் கடந்த 30-ந் தேதி எருமப்பட்டி அருகே உள்ள தேவராயபுரத்தை சேர்ந்த தனியார் என்ஜினீயரிங் கல்லூரி மாணவர் பகவதி (வயது 20) சிக்கன் பிரியாணி சாப்பிட்டு உள்ளார். தொடர்ந்து, 7 'சிக்கன் ரைஸ்' பொட்டலம் வாங்கி கொண்டு, வீட்டில் உள்ள தனது தாயார் நதியா (வயது 40), தாத்தா சண்முகம் (வயது 67) உள்ளிட்ட குடும்பத்தினருக்கு கொடுத்து உள்ளார்.

இதற்கிடையே 'சிக்கன் ரைஸ்' சாப்பிட்ட நதியா, சண்முகம் ஆகியோருக்கு மட்டும் உடல் நலக்குறைவு ஏற்பட்டது. இதையடுத்து அவர்கள் உயிருக்கு ஆபத்தான நிலையில் நாமக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு, செயற்கை சுவாசம் உதவியுடன் சிகிச்சை பெற்று வந்தனர். முன்னதாக சிகிச்சைக்கு வந்த 2 பேரும் வாயில் நுரை தள்ளியபடி வந்தனர். எனவே அவர்களுக்கு உணவு ஒவ்வாமையால் பிரச்சினை ஏற்பட்டு இருக்க வாய்ப்பு குறைவு எனவும், சாப்பாட்டில் விஷம் கலந்து இருக்க வாய்ப்பு இருக்கலாம் எனவும் மருத்துவமனை டாக்டர்கள் குழுவினர் தெரிவித்தனர். நேற்று முன்தினம் ஓட்டலில் ஆய்வு மேற்கொண்ட கலெக்டர் உமா, சம்பந்தப்பட்ட ஓட்டலுக்கு சீல் வைக்க உத்தரவிட்டார். இதையடுத்து ஓட்டலுக்கு உணவு பாதுகாப்புத்துறையினர் சீல் வைத்தனர்.

மேலும் இது தொடர்பாக விசாரணை நடத்த கலெக்டர் உமா, போலீசாருக்கு உத்தரவிட்டார். அவர்களும் 'சிக்கன் ரைஸ்' உணவு மாதிரியை எடுத்து, சேலம் உணவு பகுப்பாய்வு கூடத்துக்கு அனுப்பினர். மேலும் கல்லூரி மாணவர் பகவதி மற்றும் ஓட்டல் உரிமையாளர் ஜீவானந்தம் ஆகியோரிடம் விசாரணை நடத்தினர். இதற்கிடையே உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த கூலித்தொழிலாளி சண்முகம் நேற்று இரவு சிகிச்சை பலனின்றி பரிதாபமாக இறந்தார். அவர் சாப்பிட்ட உணவு மாதிரியை சேகரித்து போலீசார் சேலத்தில் உள்ள பகுப்பாய்வு மையத்திற்கு அனுப்பி இருந்தனர். இதற்கிடையே நேற்று இரவு சிக்கன் ரைசில் பூச்சிக்கொல்லி (விஷம்) கலந்து இருப்பது உறுதி செய்யப்பட்டது. மேலும் தொழிலாளி சண்முகம் உணவில் விஷம் கலந்து கொலை செய்யப்பட்டதும் உறுதியானது.

இதற்கிடையே போலீசாரின் முதல் கட்ட விசாரணையில் பேரன் பகவதிக்கு கள்ளத்தொடர்பு இருந்ததாகவும், அதை கண்டித்ததால் சண்முகம் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என கூறப்படுகிறது. எனவே சிக்கன் ரைஸ் வாங்கிச் சென்ற அவரது பேரன் பகவதியிடம் போலீசார் கிடுக்கிப்பிடி விசாரணை மேற்கொண்டனர்.

இந்நிலையில் தொழிலாளி சண்முகம் உயிரிழந்த விவகாரத்தில் அதிரடி திருப்பமாக சிக்கன் ரைசில் பூச்சிக்கொல்லி மருந்து கலந்து கொடுத்ததை பேரன் பகவதி ஒப்புக்கொண்டார். காதல் விவகாரத்தை குடும்பத்தினர் கண்டித்ததால் சிக்கன் ரைஸில் பூச்சிக்கொல்லியை கலந்து கொடுத்தாக பகவதி ஒப்புக்கொண்டார். உடல்நலம் பாதிக்கப்பட்ட தாய் நதியாவுக்கு மருத்துவமனையில் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

# தங்கம் இன்று சவரனுக்கு ரூ.800 குறைந்தது

சென்னை, 03 மே 2024: சென்னையில் ஆபரண தங்கத்தின் விலை இன்று ஒரேநாளில் சவரனுக்கு ரூ.800 குறைந்தது.

தங்கம் விலை கிடுகிடு என உயருவதும், பிறகு சற்று குறைவதுமான நிலை கடந்த மாதங்களில் நடந்தது. இதில் பெரும்பாலான நாட்கள் விலை அதிகரித்தபடியேதான் காணப்படுகிறது.

இதனால் நடுத்தர மற்றும் ஏழை, எளிய மக்களுக்கு தங்கம் எட்டாக் கனியாகிவிடும் என்று நினைக்கத் தோன்றுகிறது.

இந்த நிலையில் தங்கத்தின் விலை இன்று அதிரடியாக குறைந்துள்ளது. அதன்படி, சென்னையில் ஆபரணத்தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.800 குறைந்து ரூ.52,920க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிராமுக்கு ரூ.100 குறைந்து ரூ.6,615க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வெள்ளியின் விலை எவ்வித மாற்றமுமின்றி ஒரு கிராம் ரூ.87க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.87,000க்கு விற்கப்படுகிறது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வெள்ளிக்கிழமை,
மே 03, 2024

# கோபுரம் பிலிம்ஸ் ஜி.என்.அன்புசெழியன் வழங்க, சுஷ்மிதா அன்புசெழியன் பிரம்மாண்ட தயாரிப்பில், நடிகர் சந்தானம் நடிப்பில் உருவாகியுள்ள 'இங்க நான் தான் கிங்கு' திரைப்பட பத்திரிகையாளர் சந்திப்பு



சென்னை, 03 மே 2024: இந்நிகழ்வினில்ஞ்.எழுத்தாளர் எழிச்சூர் அரவிந்தன் பேசியதாவது...

கோபுரம் பிலிம்ஸ் தயாரித்த முதல் படமான 'வெள்ளக்கார துரை' எழுத்தாளரும் நான் தான். 10 வருடம் கழித்து அடுத்த வெற்றிப்படமான 'இங்க நான் தான் கிங்கு' படத்திற்கு எழுதியுள்ளேன். அன்புசெழியன் சாரிடம் கதை சொன்னேன். அவருக்கு கதை பிடித்திருந்தது, உடனே எல்லாம் ஆரம்பித்துவிட்டது. என்னுடன் இக்கதைக்காக உழைத்த அனைவருக்கும் நன்றி. மாதா, பிதா, குரு, தெய்வம் என்பார்கள் இந்த காலத்தில் ஒரு படத்திற்கு உயிர் கொடுக்கும் தயாரிப்பாளர் இன்னொரு கடவுள். கோபுரம் பிலிம்ஸ் ஜி.ஜி. அன்புசெழியன் மற்றும் சுஷ்மிதா அன்புசெழியன் இருவருக்கும் என் நன்றிகள். அடுத்ததாக இப்படம் முழுமை பெற மிகமுக்கிய காரணமான, எனக்கு வழிகாட்டியாக இருந்த சந்தானம் சாருக்கு நன்றி. என் இயக்குநர் ஆனந்த் சார், எங்களுக்குள் எப்போதும் ஊடல்கள் இருக்கும். என் கதையை முழுமையான சினிமாவாக மாற்றியுள்ள அவருக்கு நன்றி. தம்பி ராமையா சார் அருமையாக வேலை பார்த்துள்ளார் அவருக்கும் என் நன்றிகள். பாடலில் பட்டையை கிளப்பியுள்ள இமான் சாருக்கு என் நன்றிகள். அழகான தமிழ் பேசும் ஹீரோயினுக்கு வாழ்த்துகள். இந்தப்படம் மிகப்பெரிய ஹிட்டாகும். படத்தின் நிறை குறைகளை கூறி ஆதரவு தாருங்கள், அனைவருக்கும் நன்றி.

தம்பி ராமையா பேசியதாவது...

'இங்க நான் தான் கிங்கு', குடும்பங்கள் கொண்டாடும் படமாக இருக்கும். இப்போது படங்கள் நிறைய விவாதிக்கப்படுகிறது. மலையாள படங்கள் பற்றி சொல்கிறார்கள். ஆனால் எல்லாவற்றிற்கும் தாய் தமிழ் சினிமா தான். முன்பெல்லாம் தயாரிப்பு தரப்பில் கதை இலாகா இருக்கும். ஒரு கதை தயாராக பல அடுக்குகள் இருக்கும் தேவரய்யா ஆரம்பித்து ஆர் பி சௌத்திரி வரை கதையை தேர்ந்தெடுத்து தயாரிப்பதில் மிகுந்த கவனம் இருக்கும். அது போல் கோபுரம் பிலிம்ஸ் தேர்ந்தெடுத்து படம் செய்கிறார்கள். அன்புசெழியன் சார் தனது மகளை இந்த துறைக்கு கூட்டி வந்துள்ளார். தெளிவானவராக இருக்கிறார், வாழ்த்துகள் மகளே. இப்படம் காம வாடை இல்லாத காமெடிப்படம். நல்ல கலைஞர்கள் இணைந்து உருவாக்கியுள்ளனர். அன்பு தம்பி இமான் பெரிய அளவில் சிறப்பான பாடல்கள் தந்துள்ளார். சந்தானத்தின் வெற்றிக்கு காரணம் அவர் மனது தான். அவர் நிஜ ஹீரோ. தன் பழைய நண்பர்களை வைத்து காப்பாற்றுவது மிகப்பெரிய விஷயம். ஒரு காட்சியை கடைசி ரசிகன் வரை ரசிக்க வெண்டும் என்பதில் கடும் முயற்சி செய்வார் சந்தானம். அவருடன் பயணிப்பது மிகுந்த சந்தோஷம். லியா அறிமுக நடிகை என்ற தயக்கம் இல்லாமல் எங்களுக்கு ஈடு கொடுத்து நடித்துள்ளார், நல்ல எதிர்காலம் உள்ளது வாழ்த்துகள். இப்படத்தில் முழு நீள காமெடி பாத்திரம் செய்துள்ளேன். அனைவருக்கும் இப்படம் பிடிக்கும். மே 10 அனைவரும் படம் பார்த்து ஆதரவு தாருங்கள், நன்றி.

நடிகை பிரியாலயா பேசியதாவது...

இந்த நாள் எனக்கு மிக முக்கியமான நாள். என் முதல் பட மேடை, கடவுளுக்கும் என் அப்பா அம்மாவுக்கும் நன்றி. என் தயாரிப்பாளர் அன்பு சார், சுஷ்மிதா மேடம் இருவருக்கும் நன்றி. எப்போதும் ஆதரவாக என்னை விசாரித்து பார்த்துக்கொண்டார்கள். கோபுரம் பிலிம்ஸில் என் முதல் படம் செய்ததை பெருமையாக நினைக்கிறேன். எல்லோருக்கும் பிடித்த சந்தானம் சார், அவருடன் பழகிய யாருக்கும் அவரை பிடிக்காமல் போகாது. அவ்வளவு எளிமையானவர். முதலில் செட்டில் என்னுடன் இங்கிலீஷில் பேசினார். அவருக்கு நான் தமிழ் என்பது தெரியாது, நான் சொன்ன பிறகு ஜாலியாக பேசினார் அவருடன் நடித்தது மகிழ்ச்சி. கேப்டன் கூல் ஆனந்த் சார் ஜாலியாக பேசி வேலை வாங்கி விடுவார். தம்பி ராமையா சாரின் எனர்ஜி பிரமிப்பாக இருக்கும். அவர் தமிழுக்கு ரசிகை நான். இந்தப்படத்தில் வேலை பார்த்த அனைவருக்கும் என் நன்றிகள். மியூசிக் தான் படத்தின் ஆன்மா. இமான் சாருக்கு என் நன்றிகள். படம் பார்த்து ஆதரவு தாருங்கள்.

நடிகர் சந்தானம் பேசியதாவது-

'இங்க நான் தான் கிங்கு' படத்தில் ஹீரோ என்னவோ நான் தான் ஆனால் கிங்கு அன்புசெழியன் சார் தான். தமிழ்நாட்டுக்கே பெரிய ஹீரோ அவர் தான். அவர் ஆபிஸுக்கு வராத ஹீரோவே இல்லை. அவரிடம் நானே காசு கேட்டுதான் போனேன், என்னை அவருக்கு பிடித்தது, வீடு வாங்க காசு கேட்டுப்போனேன், ஆனால் அப்படி செய்யாதீர்கள், படத்திற்கு அட்வான்ஸ் தருகிறேன், படம் செய்யலாம் என்றார். அவர் மனதளவில் மிக நல்ல மனிதர். என்னுடன் எப்போதும் ஜாலியாக பேசுவார். அவர் என்னிடம் இந்தப்படம் செய்யலாம் என்றார், எனக்கும் பிடித்திருந்தது என்றவுடன் உடனே செய்யலாம் என்றார். அவருடன் இணைந்து படம் செய்தது சந்தோஷம். படம் பார்க்க வருபவர்கள் சிரித்துவிட்டு போக வேண்டும் என்றார், தயாரிப்பாளராக இல்லாமல் தியேட்டர் ஓனராக இப்படத்தை எடுத்துள்ளார். சுஷ்மிதா என் படம் மூலம் தயாரிப்பாளராக வந்துள்ளார், வாழ்த்துகள். இமான் இதுவரை என் படத்தில் இல்லாத கலரில் எனக்கு மிக வித்தியாசமான இசையை தந்துள்ளார், நன்றி. இயக்குநர் ஆனந்த் அருமையாக படத்தை எடுத்துள்ளார். தம்பி ராமையா சார் மாதிரி இண்டலிஜண்ட் பார்க்க முடியாது, அவருடன் பேசும்போது பிரமிப்பாக இருக்கும். அவர் இப்படத்தில் அருமையான பாத்திரம் செய்துள்ளார். ஹீரோயின் லயா நம்ம சேலத்துப் பெண், அவரை பாலிவுட் என நினைத்தேன் நன்றாக நடித்துள்ளார். என் படத்தில் எப்போதும் இருக்கும் மாறன், சேஷு, கூல் சுரேஷ், மனோபாலா என நிறைய பேர் இதிலும் இருக்கிறார்கள். 'கட்டா குஸ்தி' படம் ஹிட் தந்துவிட்டு இப்படத்தில் வந்து எங்களுக்காக உழைத்து தந்த செல்லா அய்யாவு சாருக்கு நன்றிகள். 90 கிட்ஸ் 2கே கிட்ஸ் லைஃப் எப்படி இருக்கும் என்பது தான் இந்தப்படம். எல்லோரும் ரசிக்கும்படியான மேஜிக்காக இப்படம் இருக்கும். உங்கள் ஆதரவைத் தாருங்கள், நன்றி.

தம்பி ராமையா, சேஷு, முனீஷ்காந்த், கூல் சுரேஷ், பால சரவணன், விவேக் பிரசன்னா, மாறன், சுவாமிநாதன் உள்ளிட்ட நடிகர்கள் முக்கிய வேடங்களில் இப்படத்தில் நடித்துள்ளனர். அனைத்து இளைஞர்களும் ரசித்து கொண்டாடும் விதமாக சந்தானத்தின் கதாபாத்திரம் உருவாகியுள்ளது.

சந்தானத்தின் ஜோடியாக பிரியாலயா கதாநாயகியாக அறிமுகமாகிறார். டி. இமானின் இசையில் பாடல்கள் மிக சிறப்பாக வந்துள்ளன. கதை, திரைக்கதை, வசனத்தை எழிச்சூர் அரவிந்தன் எழுதியுள்ளார். பல்வேறு வெற்றி படங்களுக்கு இவர் எழுத்தாளராக பங்காற்றி உள்ளது குறிப்பிடத்தக்கது. பாடல் வரிகளை இயக்குநர் விக்னேஷ் சிவன் மற்றும் முத்தமிழ் எழுதியுள்ளனர். ஒளிப்பதிவு - ஓம் நாராயண், எடிட்டிங் - எம். தியாகராஜன்,

கலை - எம். சக்தி வெங்கட்ராஜ், ஸ்டண்ட் - மிராக்கிள் மைக்கேல், பிரமாண்டமான பாடல் காட்சிகளுக்கு நடனம் அமைத்து இயக்கியுள்ளனர் கல்யாண் - பாபா பாஸ்கர்.

'இங்க நான் தான் கிங்கு' திரைப்படத்தை ஆனந்த் நாராயண் இயக்கியுள்ளார். கோபுரம் பிலிம்ஸ் ஜி.என். அன்புசெழியன் வழங்க, சுஷ்மிதா அன்புசெழியன் தயாரித்துள்ளார். மே 10 அன்று இப்படம் திரையரங்குகளில் வெளியாகிறது.

# கம்பீரத் தோற்றத்தில் சிறந்த ஆற்றல்மிக்க 'பார்ச்சூனர் லீடர் எடிஷன்' - டொயோட்டா கிர்லோஸ்கர் அறிமுகம்'

மதுரை, 03 மே 2024: டொயோட்டா நிறுவனத்தின் பார்ச்சூனர் காருக்கு எந்தவித அறிமுகமும் தேவையில்லை. ஏனெனில், இது அறிமுகம் செய்யப்பட்ட நாளில் இருந்து இன்று வரை இந்திய வாடிக்கையாளர்களால் மிகவும் விரும்பப்படும் காராக திகழ்ந்து வருகிறது. அந்த வெற்றியை கொண்டாடும் வகையில், டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் நிறுவனம் 'பார்ச்சூனரின் லீடர் எடிஷனை' இந்திய சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது. பார்ச்சூனர் லீடர் எடிஷன் அதன் புகழ்பெற்ற அம்சங்களுடன், பல்வேறு கூடுதல் சிறப்புகளையும் தனித்துவமான வடிவமைப்பையும் கொண்டுள்ளது.

இந்த கார் கம்பீரத் தோற்றத்தில் தனித்து நிற்கிறது, பல்வேறு நவீன வடிவமைப்புகளின் காரணமாக கண்கவர் தோற்றத்தைக் கொண்டுள்ளது. இதன் முன் மற்றும் பின்பக்க பம்பர் ஸ்பாய்லரைக் கொண்ட இந்த கார், தலைமைத்துவத்தின் உண்மையான சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் உள்ளது. இதன் முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்று, அதன் முக்கிய இரட்டை வண்ண வெளிப்புறம் ஆகும். இது 'கருப்பு, வெள்ளை மற்றும் தெளிவான' என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த



கொண்டுள்ளது, இது ஒப்பிடமுடியாத வசதியையும் நேர்த்தியையும் வழங்குகிறது, மேலும் ஓட்டுனர் அனுபவத்தை புதிய நிலைக்கு உயர்த்துகிறது. பார்ச்சூனர் லீடர் எடிஷன் ஒவ்வொரு பயணத்தையும் அற்புதமாக மாற்றும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

அழகிய வடிவமைப்பிற்கு கூடுதலாக சிறப்பான வசதி, சிறந்த பாதுகாப்பு மற்றும் இணைப்பை மேம்படுத்த வடிவமைக்கப்பட்ட மேம்பட்ட அம்சங்கள் என பல்வேறு சிறப்புகளைக் கொண்டுள்ளது. வயர்லெஸ் சார்ஜர் மற்றும் டயர் பிரஷர் மானிட்டரிங் சிஸ்டம் முதல் தானாக மடக்கும் கண்ணாடிகள் வரை, இந்த கார் வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், இது கருப்பு நிற அலாய் சக்கரங்களுடன் வருகிறது. இதன் காரணமாக ஒவ்வொரு திருப்பத்திலும் எந்தவித பயமும் இல்லாமல் காரை தைரியமாக திருப்பலாம். இந்த சக்கரங்கள் காரின் அழகிற்கு மேலும் அழகு

நிறுவனத்தின் விற்பனை-சேவை - பயன்படுத்தப்பட்ட கார் வர்த்தகப் பிரிவின் துணைத் தலைவர் சபரி மனோகர் கூறுகையில், நாங்கள் செய்யும் அனைத்திற்கும் எங்கள் வாடிக்கையாளர்கள் தான் இதயம். மேம்படுத்தப்பட்ட அம்சங்கள் மற்றும் ஓட்டுனர் அனுபவங்களுக்கான அவர்களின் வளர்ந்து வரும் விருப்பங்கள் மற்றும் தேவைகளை, அறிந்து அவற்றை நாங்கள் அவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறோம். எங்களின் புதிய பார்ச்சூனர் லீடர் எடிஷன் அதன் கம்பீரமான ஸ்டைல் உடன் மேலும் கூடுதல் அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இணையற்ற ஆற்றல் மற்றும் செயல்திறனை வழங்குகிறது. பல்வேறு வசதிகள் மற்றும் அழகிய வடிவமைப்புடன் கூடிய புதிய தொழில்நுட்பங்களை வழங்கும் எங்கள் நிறுவனத்தின் சான்றாக இந்த புதிய கார் உள்ளது.

எங்கள் தயாரிப்புகளின் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ள இந்திய வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இந்த தருணத்தில் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களின் இந்த பார்ச்சூனர் லீடர் எடிஷன் எஸ்யூவி ஆர்வலர்களை நிச்சயம் உற்சாகப்படுத்தும். இதன் அழகிய வெளிப்புற வடிவமைப்பு, கண்ணைக் கவரும் மற்றும் வசதியான உட்புறங்கள் மற்றும் மேம்பட்ட உயர் தொழில்நுட்ப அம்சங்கள், இந்த காரை ஒரு சிறந்த காராக முன்னிலைப்படுத்துகின்றன என்று தெரிவித்தார்.

கடந்த 2009-ம் ஆண்டு அறிமுகமானதில் இருந்து, டொயோட்டா பார்ச்சூனர் கார் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இந்திய வாடிக்கையாளர்களால் மிகவும் விரும்பப்படும் எஸ்யூவியாக இருந்து வருகிறது. இந்த பிரிவில் அதன் நிகரற்ற நிலையைத் தக்க வைத்துள்ளது. அதன் பிரீமியம் அம்சங்கள், நேர்த்தியான மற்றும் நவநாகரீக உட்புறங்கள், சிறந்த பாதுகாப்பு தரநிலைகள் மற்றும் வலுவான செயல்திறன் ஆகியவற்றுடன் அனைத்து தரப்பினரையும் கவரும் காராக இருந்து வருகிறது.

இந்த காரை வாங்குவதற்கான முன்பதிவுகள் இப்போது துவங்கி உள்ளன. வாடிக்கையாளர்கள் இதன் இணையதளம் toyotabharat.com அல்லது அருகில் உள்ள ஷோரூம்களுக்கு சென்று முன் பதிவு செய்யலாம்.

# விருத்தாசலம் அருகே ஓடும் ரெயிலில் தவறி விழுந்து கர்ப்பிணி மரணம்

சென்னை, 03 மே 2024: விருத்தாசலம் அருகே ஓடும் ரெயிலில் தவறி விழுந்து கர்ப்பிணி மரணம் அடைந்தது தொடர்பாக ஆர்.டி.ஓ. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் அருகே உள்ள மேலநீழிதநல்லூர் கிழக்குத்தெருவை சேர்ந்தவர் சுரேஷ்குமார் (வயது 25). இவர், சென்னையில் ஒரு தனியார் நிறுவனத்தில் ஊழியராக வேலை பார்த்து வருகிறார். இவருக்கும், சென்னை பெரியார் நகர் திரிசூலத்தை சேர்ந்த பி.எஸ்சி. நர்சிங் பட்டதாரியான கஸ்தூரி (வயது 22) என்பவருக்கும் கடந்த 9 மாதங்களுக்கு முன்பு திருமணம் நடந்தது. கஸ்தூரி 7 மாத கர்ப்பிணியாக இருந்தார். இதனிடையே மேலநீழிதநல்லூரில் நடைபெறும் கோவில் திருவிழாவில் பங்கேற்கவும், அங்கு நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) கஸ்தூரிக்கு வளைகாப்பு நடத்தவும் உறவினர்கள் திட்டமிட்டனர்.



அதன்படி கொல்லம் எக்ஸ்பிரஸ் ரெயிலில் சொந்த ஊருக்கு செல்ல சுரேஷ்குமார் தனது மனைவி மற்றும் உறவினர்களுக்கு டிக்கெட் முன்பதிவு செய்திருந்தார். அந்த ரெயிலில் எஸ்-9 என்ற பெட்டியில் அனைவரும் பயணம் செய்தனர். இந்த ரெயில் நேற்று இரவு 8 மணி அளவில் உளுந்தூர்பேட்டை பகுதியில் வந்து கொண்டிருந்த போது, கஸ்தூரிக்கு வாந்திக்கான அறிகுறி ஏற்பட்டது.

உடனே அவர், தனது உறவினர்கள் உதவியுடன் எஸ்-9 பெட்டியில் உள்ள கை கழுவும் இடத்திற்கு வந்தார். அந்த இடத்தில் வாந்தி எடுத்தபடி கஸ்தூரி நின்று கொண்டிருந்தார். அப்போது அவர் நிலை தடுமாறி ரெயிலில் இருந்து தவறி கீழே விழுந்து பலியானார். கஸ்தூரி தவறி கீழே விழுந்த உடன் உறவினர்கள், அந்த பெட்டியில் இருந்த அபாய சங்கிலியை பிடித்து இழுத்தனர். ஆனால் ரெயில் நிற்கவில்லை. அப்போதுதான், அந்த அபாய சங்கிலி, வேலை செய்யாமல் செயல் இழந்து இருந்தது தெரிய வந்தது. உடனே உறவினர்கள் பக்கத்தில் உள்ள எஸ்-8 பெட்டிக்கு ஓடிச் சென்று, அங்குள்ள அபாய சங்கிலியை பிடித்து இழுத்துள்ளனர். அதன் பிறகே ரெயில் நின்றுள்ளது. அதற்குள் அந்த ரெயில் கர்ப்பிணி விழுந்த இடத்தில் இருந்து 8 கிலோ மீட்டர் தூரத்திற்கு சென்று விட்டது. உடனடியாக ரெயில் நின்றிருந்தால் கர்ப்பிணியை காப்பாற்றி இருக்கலாம் என்று கஸ்தூரியின் உறவினர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதற்கிடையே கஸ்தூரி இறந்தது குறித்து விசாரணை நடத்த தெற்கு ரெயில்வே உத்தரவிட்டுள்ளது. கஸ்தூரி பலியான இடம் திருச்சி ரெயில்வே கோட்டத்தில் வருவதால் திருச்சி கோட்ட அதிகாரிகள் விசாரணை நடத்த உள்ளனர். மேலும் கஸ்தூரி பலியான ரெயில் தற்போது கொல்லம் சென்றடைந்து விட்டதால் அங்கு வைத்து அபாய சங்கிலி சரியாக வேலை செய்கிறதா? என்பது தொடர்பாக ஒவ்வொரு பெட்டியிலும் ரெயில்வே பணியாளர்கள் ஆய்வு செய்து வருகின்றனர்.

இதற்கிடையே கஸ்தூரிக்கு திருமணமாகி 9 மாதங்களே ஆவதால் அவரது இறப்பு குறித்து விசாரிக்க ஆர்.டி.ஓ.வுக்கு (கோட்டாட்சியர்) விருத்தாசலம் ரெயில்வே போலீசார் பரிந்துரை செய்துள்ளனர். அதன்படி திருக்கோவிலூர் ஆர்.டி.ஓ. கண்ணன் விசாரணை நடத்த உள்ளார்.